பெருநகர சென்னை மாநகராட்சி

GREATER CHENNAI CORPORATION

# 2023 - 2024

# நிதி நிலை அறிக்கையில்

# மாண்புமிகு மேயர் அவர்களால்

# அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீது

# மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரம்

# கல்வி

**அறிவிப்பு 1**

**அனைத்து சென்னை உயர் / மேல்நிலைப் பள்ளிகளிலும் செய்முறை வகுப்புகளைச் சிறப்பான முறையில் நடத்திட ஆய்வகங்களின் உட்கட்டமைப்புகள் படிப்படியாக மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, 2023-2024-ஆம் கல்வியாண்டில் முன்னுரிமையின் அடிப்படையில் மதிப்பீட்டில் 10 மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 10 மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆய்வகங்கள் மேம்படுத்தப்படும்.**

சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நுங்கம்பாக்கம், சென்னை மேல்நிலைப்பள்ளி நெசப்பாக்கம், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி சைதாப்பேட்டை மற்றும் சென்னை உயர்நிலைப்பள்ளி குக்ஸ் ரோடு ஆகிய நான்கு பள்ளிகளில் 2024-பிப்ரவரி மாதம் முதற்கட்டமாக CITIIS நிதியின் கீழ் மாதிரி ஆய்வகங்களை செயல்படுத்தும் பணியை ஒப்பந்ததாரர் வழியே மேற்கொள்ள 20.02.2024 அன்று ஒப்பம் திறக்கப்பட்டுள்ளது. தகுதியான ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இந்த கல்வியாண்டில் மூலதன நிதியின் கீழ் மாதிரி ஆய்வகங்கள் அமைக்கப்படும். இதன் தொடர்ச்சியாக மற்ற பள்ளிகளிலும் ஆய்வகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிவிப்பு 2**

**பெருநகர சென்னைப் பள்ளிகளில், தலைமை ஆசிரியர்கள் முக்கியமான அறிவிப்புகளை அறிவிக்கவும், பள்ளியின் அனைத்து பகுதிகளையும் உடனடியாக தொடர்பு கொள்வதற்கு வசதியாக சென்னை மாநகராட்சியின் அனைத்து பள்ளிகளிலும் ஒவ்வொரு தளத்திலும் Public Address System அமைத்து தரப்படும். முதற்கட்டமாக, வரும் கல்வியாண்டு 2023-24-ல் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.35.00 இலட்சம் செலவில் 70 Public Address System அமைத்து தரப்படும். இத்திட்டம் படிப்படியாக அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தப்படும்.**

Public Address System 33 உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.29.60 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதம் 37 பள்ளிகளில் Public Address System நல்ல நிலையில் இருப்பதால் 2023-2024 கல்வியாண்டில் அந்த பள்ளிகளுக்கு செயல்படுத்தப்படவில்லை.

அறிவிப்பு 3

**வளர் இளம் பருவத்தில் (Adolescent Stage) மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுவதன் மூலமே, மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த முடியும். எனவே பிரச்சனைகளுக்கான தீர்வு தேவைப்படும் பள்ளிகளில், மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்க அனைத்து மண்டலங்களிலும் ஆலோசகர்கள் (Counsellors) ஒரு கல்வியாண்டிற்கு ரூ.30 இலட்சம் செலவில் பணியமர்த்தப்படுவார்கள்.**

மாணவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குவது குறித்து, 04.10.2023 அன்று துணை ஆணையர் (கல்வி) அவர்கள், Madras School of Social Work (MSSW) கல்லூரியின் துறைத் தலைவருடன் பேசிய பின்னர் மண்டலம்-4ல் உள்ள 7 பள்ளிகளின் பட்டியல்களை, உதவி கல்வி அலுவலர்களிடம் பெற்று MSSW கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பள்ளியின் மாணவர்களோடு கலந்துரையாடி விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் 7 பள்ளிகளின் மாணவர்களுக்கும் MSSW கல்லூரி மாணவர்கள் மூலமாக மனநல ஆலோசனை வழங்கப்படும்.

அறிவிப்பு 4

**(அ) பழுது ஏற்பட்டிருக்கும் பள்ளிக் கட்டடங்களின் மேற்தளங்களை முன்னுரிமையின் அடிப்படையில், Epoxy Water Proofing என்ற தொழில்நுட்பத்தின் மூலம், மறுசீரமைப்பது (Retrofitting of roofs) மற்றும் பள்ளிக் கட்டடங்களின் அனைத்து விதமான பராமரிப்பு பணிகளுக்காக 2023-2024 கல்வியாண்டில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

**(ஆ) அரசாணை(நிலை)எண். 48, பள்ளிக் கல்வி (ப.க.5(2)) துறை, நாள் : 01.03.2023-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள 90 தொடக்கப்பள்ளிகள், 38 நடுநிலைப்பள்ளிகள், 8 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப்பள்ளிகள் உட்பட 139 பள்ளிகளுக்கு 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.15 கோடி செலவில் அனைத்து விதமான பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், இப்பள்ளிகளில் தூய்மைப் பணியை மேற்கொள்ள NULM திட்ட பணியாளர்கள் மூலம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

(அ) பழுது ஏற்பட்டிருக்கும் 281 சென்னைப் பள்ளிக் கட்டடங்களின் மேற்தளங்களை சீரமைக்க, ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டது. தற்போது பணிச் செலவினம் ரூ.16.53 கோடிக்கு அனுமதி பெறப்பட்டது. சீரமைக்கும் பணி மேற்கொள்ளபட்டு வருகிறது. இதுவரை ரூ.10.01 கோடி செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 139 பள்ளிகளில் 2023-2024-ஆம் நிதியாண்டில் 46 பள்ளிகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள, ரூ.5.00 கோடி பணிமதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதுவரை 5 பள்ளிகளில் பணி நிறைவடைந்துள்ளது. இதற்கான செலவினம் ரூ.6.77 கோடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 41 பள்ளிகளில் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், தூய்மைப்பணியை மேற்கொள்ள தற்காலிக தினக்கூலி பணியாளர்களை அமர்த்திக் கொள்ள நிர்வாக அனுமதியும், ரூ.5.00 கோடி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. 2023 ஜீன் மாதம் முதல் தற்போது வரை தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்டுள்ள பணிகள் மண்டலம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு கட்டடத் துறையில் பட்டிகள் தீர்வு செய்யப்படும்.

அறிவிப்பு 5

**சென்னைப் பள்ளிகளில் இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு ஸ்ருதி பெட்டி (Manual), மின்கலன்களால் இயக்கப்படும் ஸ்ருதி பெட்டி (Electronic), ஆர்மோனியம், தாளம் மற்றும் மராக்கஸ் குச்சிகள் Maracas போன்ற இசைக்கருவிகள் ஒரு பள்ளிக்கு ரூ.25,000/- வீதம் 20 பள்ளிகளுக்கு ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

ரூ.5.00 இலட்சம் செலவில் இசைக்கருவிகளை கொள்முதல் செய்ய, ஸ்ருதிலயா நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டு, அவ்விசைக்கருவிகள் கொள்முதல் செய்து 13.07.2023 அன்று மாண்புமிகு மேயர் அவர்களால் 20 பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 6

**சென்னை மாநகராட்சி அனைத்து பள்ளிகளிலும் தானியங்கி மணி ரூ.27.17 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து தரப்படும்.**

தானியங்கி மணிகள் ரூ.27.05 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து, 179 பள்ளிகளில் பொருத்தப்பட்டுள்ளது.

அறிவிப்பு 7

**சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே கற்றல்/கற்பித்தல் செயல்முறைகள் மட்டுமின்றி நமது நாட்டின் பாராளுமன்ற நடைமுறைகளை அறிவதோடு, பிற நாடுகளின் பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் சவால்களை எதிர் கொள்ளவும், தீர்வுகளைக் கண்டறியவும், பன்னாட்டு கலாச்சாரங்கள், கல்விமுறை, சுற்றுச்சூழல் ஆகியவற்றைப் பற்றி நமது மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு பள்ளிகளில் மாதிரி ஐக்கிய நாடு (MUN) குழு அமைக்கப்படும்.**

இக்கல்வியாண்டில் 35 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ரூ.3.66 இலட்சம் செலவில் (MUN) குழு அமைக்கப்பட்டுள்ளது. 35 பள்ளிகளில் உள்ள Nodal ஆசிரியர்களுக்கு மூன்று கட்டங்களாக பயிற்சி வழங்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இக்கல்வியாண்டில் பிப்ரவரி 2024-ல் பள்ளி மாணவர்களிடையே இறுதி நிகழ்ச்சி நான்கு மையங்களில் நடத்தப்படவுள்ளது.

அறிவிப்பு **8**

**மாலை நேர சிறப்பு வகுப்பு மற்றும் குறைதீர் கற்பித்தல் வகுப்பில் (Remedial Class) பங்கேற்கும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஜனவரி மாதம் முதல் தேர்வு முடியும் (ஏப்ரல் மாதம்) வரை மாலையில் சிறுதீனி (அவித்த சுண்டல் அல்லது பயிறு வகைகள்) ரூ.100 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

81 எண்ணிக்கையிலான, சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஜனவரி 2024 மற்றும் பிப்ரவரி 2024 ஆகிய இரு மாதங்களுக்கு சுண்டல் வழங்க முறையே ரூ.40.47 இலட்சம் மற்றும் ரூ.45.99 இலட்சம் முன்பணம் பெற்று தலைமை ஆசிரியர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது, அதன்படி அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி மாலை நேர சிறப்பு வகுப்பு மற்றும் குறைதீர் கற்பித்தல் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு சிறுதீனி வழங்கப்படுகிறது.

அறிவிப்பு **9**

**திருக்குறளுடன் அதற்கான விளக்கமும் நாள்தோறும் காலை இறைவணக்கக் கூட்டத்தில் மாணவர்களை கூறவைத்து தமிழ் பேசும் திறனை மேம்படுத்த 2023-2024-ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.**

சென்னைப் பள்ளிகளில் நாள்தோறும் நடைபெறும் காலை இறைவணக்கக் கூட்டத்தில் திருக்குறளுடன் அதற்கான விளக்கமும் மாணவர்களை கூறவைத்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **10**

**ஒவ்வொரு புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் காலை இறைவணக்கக் கூட்டத்தை ஆங்கிலத்தில் நிகழ்த்த அனைத்து மாணவர்களுக்கும் சுழற்சி முறையில் வாய்ப்பினை வழங்கி மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசும் புலமையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தலைமை பண்பையும் உயர்த்த வழிவகை செய்யப்படும். மேலும், ஆங்கிலப் பாட வேளையில், கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்சம் இரண்டு மாணவர்களை ஏதேனும் பொது தலைப்பில் 2 நிமிடங்கள் ஆங்கிலத்தில் பேச வைப்பதை நடைமுறைப்படுத்தி சுழற்சி முறையில் ஆங்கிலத்தில் பேசும் புலமையை உயர்த்த வழிவகை செய்யப்படும்.**

மாணவர்களின் ஆங்கில மொழி திறன் மேம்படுத்துவதற்கான செயல்பாடுகள் காலை இறைவணக்கக் கூட்டத்திலும் மற்றும் ஆங்கிலப் பாட வேளைகளிலும் கற்பிக்கும் ஆசிரியர்களால் நடைமுறைபடுத்தப்பட்டு, இந்நடைமுறை, பள்ளிகளில் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்யும் பொருட்டு, சம்மந்தப்பட்ட உதவி கல்வி அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **11**

**சென்னை மாநகராட்சி பள்ளிகளில் நமக்கு நாமே திட்டத்தின் (Namakku Naame Thittam) கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் பொதுமக்களின் பங்களிப்புடன் இணையதள வசதியுடன் ஸ்மார்ட் வகுப்புகள், தேவைப்படும் பள்ளிகளில் அமைக்கப்படும்.**

இணையதள வசதியுடன் ஸ்மார்ட் வகுப்புகள் ஏற்படுத்த, நமக்கு நாமே திட்டத்தின் கீழ் செயல்படுத்த அறிவிக்கப்பட்டது. எனினும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்கள் சார்ந்த தொகுதியில் உள்ள பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைக்க, தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிறுவக்கோரி, மதிப்புமிகு ஆணையர் மூலம் நேர்முக கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 14 பள்ளிகளில் 28 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளது. எழும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 16 சென்னைப் பள்ளிகளில் 39 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளது. கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஐந்து பள்ளிகளில் 5 ஸ்மார்ட் வகுப்பறைகள் நிறுவப்பட்டுள்ளது.

மேலும், திருவொற்றியூர், இராயபுரம், அம்பத்தூர் மற்றும் தியாகராய நகர் ஆகிய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சென்னை பள்ளிகளிலும் ஸ்மார்ட் வகுப்பறையில் நிறுவுவதற்கான ஆயத்த பணிகள் நடைபெற்று வருகிறது. நமக்கு நாமே திட்டத்தின் நிதியிலிருந்து இதற்காக ஒதுக்கீடு பெறப்படவில்லை.

அறிவிப்பு **12**

1. **ஆசிரியர் தொழில் மேம்பாடு : 10 மற்றும் 12-ஆம் வகுப்புகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்தும் ஆசிரியர்களுக்கு, இதுவரை ரூ.1,500/- ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வந்தது. 2023-2024-ஆம் கல்வியாண்டில் ஊக்கத்தொகை ரூ.3,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். அதிகபட்சம் 400 ஆசிரியர்களுக்கு ரூ.12 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.**

   (அ) இத்திட்டம் கடந்த 12-10-2023 அன்று மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர்

அவர்களால் 400 ஆசிரியர்களுக்கு உயர்த்தப்பட்ட ஊக்கத் தொகையாக ரூ.3,000/- வீதம் மொத்தமாக ரூ.12.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது.

**2. மேலும், கூடுதலாக ஆசிரியர்கள் விரும்பும் எந்த Massive Open Online Course (MOOC)-ஐப் பெறுவதற்கும் உதவித் தொகை வழங்கப்படும். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

(ஆ) ஆசிரியர்கள் அவர்களுடைய திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக Massive Open Online Course (MOOC)-ல் சேர்வதை ஊக்குவிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு உதவித் தொகை வழங்க, மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஆசிரியர்களிடமிருந்து, தேவையான விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. விபரங்கள் பெறப்பட்டவுடன், பயிற்சியில் சேர அனுமதி வழங்கப்படும்.

**அறிவிப்பு 13**

**10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சியை ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (எ.கா: ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களூர், டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்லப்படுவர். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

10 மற்றும் 12ஆம் வகுப்பில், 100% தேர்ச்சி ஏற்படுத்திய 70 பள்ளிகளிலிருந்து 408 ஆசிரியர்களை, சென்னை IIT, சென்னை, International School, தரமணி, கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஒக்கேனக்கல் ஆகிய இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வாயிலாக கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டுள்ளது. இதற்காக ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு. ரூ.16.40 செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிப்பு **14**

**2023-2024-ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஏதேனும் ஒரு பாடத்தில் 100/100 மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு, தலா ரூ.10,000/- வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்படும். இத்திட்டம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இது தொடர்பாக தனியே வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படும்.**

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 71 பாடங்களில் 62 மாணவர்கள், 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஒரு பாடத்திற்கு ரூ.10,000/- வீதம் பரிசு வழங்குவதற்காக மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, ரூ.7.10 லட்சம் தொகை செலவிடப்பட்டுள்ளது.

அறிவிப்பு **15**

**சென்னைப் பள்ளிகளில் பயின்று மேல்நிலை கல்வியில் தேர்ச்சி பெற்று Joint Entrance Exam (JEE), Common Law Admission Test (CLAT), National Institute of Fashion Technology (NIFT) மற்றும் National Eligibility cum Entrance Test (NEET) போன்ற தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, அதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அரசு கல்வி நிறுவனங்களில் மட்டும் (எ.கா. IIT, National Law School of India University – Bangalore, AIIMS and MMC) சேரும் மாணவர்களுக்கு அவர்களின் முதலாம் ஆண்டு கல்விக் கட்டணம் (Tuition Fee) மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சியால் 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் வழங்கப்படும். இது தொடர்பாக தனியே வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்படும்.**

பள்ளிகளுக்கு, சுற்றறிக்கை அனுப்பி, தகுதிவாய்ந்த மாணவர்களின் விண்ணப்பங்கள் கோரப்பட்டது. எனினும், அரசின் 7.5% உள்ஒதுக்கீட்டின்படி மாநில கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்ந்துள்ள காரணத்தால்,

தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று, அதன் மூலம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அரசு கல்வி நிறுவனங்களில் (எ.கா. IIT, National Law School of India University – Bangalore, AIIMS and MMC) சேருவதற்கு மாணவர்கள் யாரும் போட்டியிடவில்லை. இதன்காரணமாக இந்த கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து கல்விக் கட்டணம் எவருக்கும் செலுத்தப்பட வேண்டிய நிகழ்வு ஏற்படவில்லை.

அறிவிப்பு **16**

**அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அனைத்துப் சென்னைப் பள்ளிகளுக்கும் ரூ.6.27 இலட்சம் செலவில் முதலுதவி பெட்டிகள் வழங்கப்படும்.**

அனைத்து தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் முதலுதவிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2.65 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிப்பு **17**

**2023-2024-ஆம் கல்வியாண்டில் சென்னை மாநகர பள்ளிகளில் உள்ள அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் கணினி ஆய்வகங்களில் ரூ.5 இலட்சம் செலவில் தீயணைப்பான் கருவிகள் (Fire Extinguisher) பொருத்தப்படும்.**

இத்திட்டத்தின் கீழ் 46 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தீயணைப்பான் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது. இதற்காக ரூ.4.84 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிப்பு **18**

**பள்ளிகளில் பெற்றோர்களுக்கான நோக்குநிலைத் (orientation) திட்டம் : தற்சமயம் School Management Committee (SMC) கூட்டங்களின் போது (மாதத்திற்கு ஒருமுறை) பெற்றோர்கள் பள்ளிகளுக்கு அழைக்கப்பட்டு,**

**மாணவர்களின் கற்றல் நிலை மற்றும் பள்ளிகளின் கல்வி மேம்பாடுத் திட்டம் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. 2023-2024-ஆம் கல்வியாண்டில், ஆண்டுக்கு ஒருமுறை கல்வி மேம்பாடு குறித்த சிறப்பு வழிகாட்டுதல் நிகழ்ச்சியையும், SMC கூட்டத்தின் போது இணைத்து செயல்படுத்தப்படும்.**

பள்ளிகளில் பெற்றோர்களுக்கான நோக்குநிலைத் (Orientation) திட்டம், தற்சமயம், School Management Committee (SMC) கூட்டங்களின் போது (மாதத்திற்கு ஒருமுறை) பெற்றோர்களை பள்ளிகளுக்கு அழைக்கப்பட்டு, மாணவர்களின் கற்றல் நிலை மற்றும் பள்ளிகளின் கல்வி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **19**

**சென்னை பள்ளிகளில், மாணவர்கள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு வரவும், நாள் முழுவதும் மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கவும், முதல் பாட வேலையின் போது 10 நிமிடம் தினமும் மகிழ்ச்சியான வகுப்புகள் (Happy Class) நடத்தப்படும். இவ்வகுப்பில் மாணவர்களுக்கு நன்நெறிப்பண்புகள் கற்பிக்கப்படும். இது சென்னை மாநகரப் பள்ளி மாணவர்களை நல்லொழுக்கம் மற்றும் படிப்பிலும் சிறந்து விளங்க உதவும்.**

சென்னைப் பள்ளிகளில், மகிழ்ச்சியான வகுப்பு நடத்த கால அட்டவணை தயாரிக்கப்பட்டு சுற்றறிக்கையின் வாயிலாக அறுவுறுத்தப்பட்டு ஜூன் 2023 முதல் தொடர்ச்சியாக நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **20**

**பள்ளி செல்லும் மாணவர்களையும், பொதுமக்களையும் ஈர்க்கும் வகையில், 2023–2024-ஆம் கல்வியாண்டில் அனைத்து சென்னை மாநகரப் பள்ளிகளின் முகப்பிலும் தனித்துவம் வாய்ந்த சென்னைப் பள்ளிகளுக்கான**

**சின்னம் (Logo) அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும். மேலும், பள்ளிகளில் பயன்படுத்தப்படும் செய்முறை பயிற்சி ஏடுகள், பதிவேடுகள், சான்றிதழ்கள், அறிக்கை அட்டைகள் போன்றவற்றில் சென்னைப் பள்ளிகளுக்கான சின்னம் (Logo) பதிக்கப்படும்.**

CITIIS விதிமுறைகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் மொத்தம் 419 பள்ளிகளில் 164 சென்னைப் பள்ளிகளின் முகப்பில் தனித்துவம் வாய்ந்த சின்னங்கள் (Logo) அமைக்கும் பணி நிறைவடைந்தது. மேலும், Core City சென்னைப் பள்ளிகளிலும் சின்னங்கள் (Logo) அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**அறிவிப்பு 21**

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் அனைவரையும் நான்கு குழுக்களாக அமைத்து அக்குழுக்களுக்கு அரக்கு, பச்சை, மஞ்சள், ஊதா ஆகிய நான்கு வண்ணங்களில் 28,200 மாணவர்களுக்கு ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் T.Shirt வழங்கப்படும்.**

சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் 29,258 மாணவ / மாணவியர்களுக்கு, ஒருவருக்கு ஒன்று வீதம், ரூ.62.06 இலட்சம் மதிப்பீட்டில் T.Shirt வழங்கப்பட்டுள்ளது.

**அறிவிப்பு 22**

**சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்தினை கருத்தில் கொண்டு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் வருடத்தில் மூன்று மாதங்களுக்கொரு முறை மருத்துவ முகாம் நடத்தப்படும். இம்மருத்துவ முகாமில் அனைத்து**

**மாணவர்களும் ஆண்டுக்கு ஒரு முறை பயனடையுமாறு செயல்படுத்தப்படும், இதனால் மாணவர்களின் உடல் நலத்தை பேணிக்காப்பதால் அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.**

சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் உடல் ஆரோக்கியத்தினைக் கருத்திற் கொண்டு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒரு வருடத்தில் மூன்று மாதங்களுக்கொரு முறை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்மருத்துவ முகாம் அனைத்து மாணவ/மாணவியர்களும் பயனடையுமாறு செயல்படுத்தப்படுகிறது.

அறிவிப்பு **23**

**2023-2024-ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளி கல்விக்குப் பின் அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நிகழ்வாக தொழிற்சாலைகளை பார்வையிடுவதற்கு ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.**

இத்திட்டத்தின் கீழ் 5,246 மாணவ மாணவியர்களை கல்வி சுற்றுலா அழைத்துச் சென்றதற்காக மாநகர போக்குவரத்து கழகத்திற்கு ரூ.9.66 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

அறிவிப்பு **24**

**சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவியர்கள் பள்ளிப் படிப்பிற்குப்பின் அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் வேலைவாய்ப்பினை பற்றி அறிந்து முன்னேற்றப்பாதையில் செல்வதற்கு வழிகாட்டும் விதமாக அது தொடர்பான துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் சிறந்து விளங்கும் முன்னாள் மாணவர்களின் வாயிலாக வழிகாட்டுதல் நிகழ்ச்சி (Career Guidance Programme) நடத்தப்படும்.**

2023 – 2024-ஆம் கல்வியாண்டில் பயிலும் அனைத்து 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் E-Book அவர்களது தனிப்பட்ட வாட்ஸ்-அப் எண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 2023 – 2024-ஆம் கல்வியாண்டில் அறிவியல் பிரிவு மாணவர்களுக்கு கடந்த 2023 ஜூன் மாதம், இறுதி வாரத்தில் Inner Wheel Of Madras உதவியுடன், உயர் கல்வி வழிகாட்டி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அந்தந்த பள்ளிகளில் பணிபுரியும் அறிவியல் ஆசிரியர்கள் மூலம் அறிவியல் பாடப்புத்தகத்திலுள்ள பாடப் பிரிவுகளை விளக்கிக் கூற தலைமையாசிரியர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**அறிவிப்பு 25**

**சென்னைப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களில் கற்றலில் பின் தங்கியுள்ள மாணவர்கள் Tuition செல்லாமல் அவர்களுக்கு புகழ் பெற்ற ஆசிரியர்கள் மூலம் இணையதளம் வழியாக நான் முதல்வன் என்ற திட்டத்தின் கீழ் கற்றல் பயிற்சி வழங்கப்படும்.**

சென்னைப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு, வளர்அறி மதிப்பீடு (Formative Assessment), தொகுத்தறி மதிப்பீடுகளின் (Summative Assessment) அடிப்படையில் 50%க்கு கீழுள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களில், காலாண்டுத் தேர்வு மதிப்பெண்களையும் கணக்கில் கொண்டு கற்றலில் பின் தங்கி உள்ள மாணவர்களுக்கு திறமையான ஆசிரியர்கள் மூலம் மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு 26**

**சென்னைப் பள்ளிகளில் 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களை பொதுவான தேர்வின் மூலம், தேர்ந்தெடுத்து போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும் பயிற்சிகள் வழங்கப்படும்.**

போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் நேரடியாகவும் மற்றும் இணையதளம் வாயிலாகவும் பயிற்சிகள் அளிப்பதற்காக SCIENCE TECHNOLOGY ENGINEERING AND MATHEMATICS ACADEMY OF EXCELLENCE என்ற பயிற்சி தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 11-ஆம் வகுப்பு பயிலும் 36 மாணவ/மாணவிகள், 12-ஆம் வகுப்பு பயிலும் 35 மாணவர்கள் என மொத்தம் 71 மாணவ/ மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஒதுக்கீட்டுதொகை ரூ.1.00 கோடி. ஆகஸ்டு 2023 முதல் ஜனவரி 2024 வரை ரூ.19.92 இலட்சம் செலவினம் செய்யப்பட்டுள்ளது.

**அறிவிப்பு 27**

**சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களால், திட்டமிட்டு ஒவ்வொரு ஆண்டும் ஆண்டு விழா நடத்தப்படும். இவ்வாண்டு விழாவில் பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்டு மாணவர்களின் முன்னேற்றத்தையும், பள்ளியின் செயல்பாடுகளையும் சிறப்பித்து, பள்ளியின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு வழிகாட்டுவார்கள்.**

சென்னை தொடக்க / நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களால் 2023-2024-ஆம் கல்வியாண்டில் நடத்தப்பட்ட ஆண்டு விழாவிற்கு, பாராளுமன்றம் / சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மாண்புமிகு துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோர்களை, பள்ளியின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுக்காக வழிகாட்டும் பொருட்டு, அழைப்பாளராக அழைக்கப்படுகிறார்கள்.

# பொது சுகாதாரம்

**அறிவிப்பு 28**

**சுகாதாரத் துறையின் கீழ் பணிபுரியும் NULM தற்காலிக தொழிலாளர்களுக்கு நலப்பொருட்களும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மழைக்கவச உடை (Raincoat) மற்றும் பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கப்படும். இதற்காக ரூ.18.75 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களில் உள்ள தற்காலிக தொழிலாளர்களுக்கு மழைக்கவச உடை (Raincoat) வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**அறிவிப்பு 29**

**சுகாதாரத் துறையின் கீழ் நடத்தப்படும் மருத்துவ முகாம்களுக்கு அனைத்து கோட்டங்களுக்கும் கூடாரம், மேஜை மற்றும் நாற்காலி வாடகை முறையில் அமர்த்தி கொள்ள ரூ.45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து மண்டலம் வாரியாக தேவையின்படி பகிர்ந்து அளிக்கப்படும்.**

மருத்துவ முகாம்களின் போது தேவையின் அடிப்படையில் அந்தந்த மண்டல சுகாதார அலுவலர்களின் அளவிலேயே, மேசைகள் மற்றும் நாற்காலிகள் வாடகைக்கு எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டு மண்டல நல அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**அறிவிப்பு 30**

**கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு தடுப்புப் பணிகளைச் செய்யும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும், ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் தரமான Vector Control Kit கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

Vector Control Kit கொள்முதல் செய்வதற்கு, அவற்றின் தரம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடுகளையும், அதன் மதிப்பீடுகளையும் ஆய்வு செய்து கொள்முதல் செய்வதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு Next Gen என்ற நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு **31**

**சென்னை மாநகரில் சுற்றித் திரியும் நாய்களை பிடிப்பதற்கு 6 புதிய வாகனங்கள், ரூ.60 இலட்சம் மதிப்பீட்டிலும், மாடுகளை பிடிப்பதற்கு 5 புதிய வாகனங்கள், ரூ.1.35 கோடி மதிப்பீட்டிலும் கொள்முதல் செய்யப்பட்டு உபயோகத்திற்கு கொண்டு வரப்படும்.**

நாய் பிடிக்கும் வாகனங்கள் மற்றும் மாடு பிடிக்கும் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தொடக்க விழாவிற்கு தயாராக உள்ளது.

அறிவிப்பு **32**

**மக்களுக்கு ஏற்படும் நோய் நிலையை மதிப்பிடுவதற்காக தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையில் (Communicable Disease Hospital) சென்னை மாநகரின் கண்காணிப்பு பிரிவு ஏற்படுத்தப்படும்.**

தண்டையார்பேட்டையில் உள்ள தொற்று நோய் மருத்துவமனையில் மெட்ரோ கண்காணிப்பு பிரிவிற்கு தேவையான உபகரணங்கள் வாங்கவும் மற்றும் அப்பணிக்கு தேவையான பணியாளர்களை நியமிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மெட்ரோ கண்காணிப்பு பிரிவிற்கென பஞ்சாப் நேஷனல் வங்கியில் Zero Balance வங்கி கணக்கு துவங்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு 33

**2023-2024-ஆம் ஆண்டில், 5 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தர அங்கீகாரச் சான்றிதழ்கள், National Quality Assurance Standards (NQAS) என்ற நிறுவனத்திடமிருந்து பெற்று தரப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 5 UPHC-களான ஒரகடம் UPHC, VR Nagar UPHC, ஆலந்தூர் UPHC, கோயம்பேடு UPHC, விருகம்பாக்கம் UPHC-களுக்கு (NQAS) தேசிய தர உறுதிச் சான்று பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அறிவிப்பு 34

**2023-2024ஆம் நிதியாண்டில், ஷெனாய் நகர் மற்றும் ஆலந்தூர் ஆகிய மண்டலங்களில், தலா ரூ.100 இலட்சம் மதிப்பில் இரண்டு டயாலிசிஸ் மையங்கள் முதற்கட்டமாக 10 இயந்திரங்களுடன் நிறுவப்படும்.**

ஆலந்தூர் மற்றும் செனாய் நகர், 24 மணிநேர மகப்பேறு மருத்துவமனையின் (EOC) கட்டடப் பணிகள், கட்டடத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்டட பணிகள் முடிவடைந்தவுடன், டயாலிசிஸ் இயந்திரம் கொள்முதல் செய்து செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

அறிவிப்பு 35

**ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி மீதான தடை அமலாக்கத்தை தீவிரப்படுத்தும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி சோதனை அடிப்படையில் “மஞ்சப்பை” வழங்கும் திட்டம், சுயஉதவி குழுக்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும். பொது மக்களின் வரவேற்பு மற்றும் கருத்துகளின் அடிப்படையில் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும்.**

1) தியாகராய நகர், மண்டலம் 10-க்கு உட்பட்ட ஆர்.கே.எம் சாரதா வித்யாலயா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 04.01.2024 அன்று ஒரு முறை உபயோகப்படுத்தி தூக்கி எறியக் கூடிய நெகிழி பொருட்களால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள், அதற்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் மற்றும் புகையில்லா போகி குறித்து மாணவ/ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

2) தியாகராய நகர், மண்டலம் 9க்கு உட்பட்ட வித்யோதயா பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 05.01.2024 அன்று பள்ளிகளுக்கு இடையே சுற்றுச்சூழல் மேம்பாடு குறித்து ஓவியப்போட்டி நடத்தப்பட்டது. பின்னர், அனைவருக்கும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒத்துழைப்புடன் 500 துணிப்பைகள் வழங்கப்பட்டன.

# திடக்கழிவு மேலாண்மை

அறிவிப்பு **36**

**பெருநகர சென்னை மாநகராட்சியில், மண்டலங்கள் 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றில் பணிபுரியும் 10,002 எண்ணிக்கையிலான தூய்மை பணியாளர்களுக்கு, ஆண்டிற்கு இரண்டு எண்ணிக்கையிலான பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இரவில் ஒளிரும் புதிய வடிவமைப்புடன் கூடிய சீருடைகள் வழங்கப்படும். இதற்காக மாநகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து ரூ.3.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

மண்டலம்-4, 5, 6, 7 மற்றும் 8 ஆகிய மண்டலங்களில், பணிபுரியும் 10,276 நிரந்தர மற்றும் தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு, சீருடை வழங்குவதற்கு, மதிப்பீடு ரூ.3.23 கோடிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டு 27.02.2024 அன்று ஒப்பம் திறக்கப்படவுள்ளது. ஒப்பம் திறக்கப்பட்டவுடன் குறைந்த விலை புள்ளி வழங்கியுள்ள நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி நிரந்தர / தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்கப்படும்.

அறிவிப்பு **37**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் நாள்தோறும் சேகரிக்கப்படும் சுமார் 20 மெட்ரிக் டன் நெகிழிக் கழிவுகளிலிருந்து எரிபொருளாக பயன்படுத்தக்கூடிய எண்ணெய் தயாரிக்கும் ஆலை (Pyrolysis Plant) மணலியில் கட்டமைக்கப்பட்டுள்ளது. மேலும், மறுசுழற்சி செய்ய இயலாத உலர் கழிவுகளை, விஞ்ஞான ரீதியில் எரிக்க 5 மெட்ரிக் டன் திறன் கொண்ட எரியூட்டி (Incinerator) ஆலை ஏற்கனவே திருவொற்றியூரில் கட்டமைக்கப் பட்டுள்ளது. மேற்கண்டுள்ள இரண்டு பணிகளுக்கான ஆலையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்ற பின்னர், செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.**

நெகிழிக் கழிவுகளிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் ஆலைக்கு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து (TNPCB), செயலாக்க ஆணை (CTO) பெறப்பட்டுள்ளது. தற்போது சோதனை ஓட்டம் முடிவுற்ற நிலையில் விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**அறிவிப்பு 38**

**2023-24-ஆம் நிதியாண்டில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வைக்கப்பட்ட அனைத்து காம்பாக்டர் தொட்டிகளிலும், ஈர கழிவுகள் மற்றும் உலர் கழிவுகள் என்ற குறியீடுகள் தெளிவாக குறிப்பிடப்படும். அதன்படி, தனித்தனியாக கழிவுகள் சேகரிக்கப்பட்டு தரம் பிரிக்கப்படும்.**

அறிவிப்பில் தெரிவித்துள்ளபடி ஈர கழிவுகள் மற்றும் உலர் கழிவுகள் என்ற குறியீடுகள் கீழ்கண்டுள்ள மண்டலங்களில் உள்ள காம்பாக்டர் தொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

M/s. ராம்கி (மண்டலம் 1, 2, 3 மற்றும் 7ன் சில கோட்டங்கள்)
(மொத்தம் - 723, நிறைவு பெற்றது - 600, நிலுவையில் உள்ளது - 123)
மண்டலம் – 4 (மொத்தம் - 1145, நிறைவு பெற்றது - 1145)
மண்டலம் – 5 (மொத்தம்-929, நிறைவு பெற்றது - 925, நிலுவையில் உள்ளது - 4)
மண்டலம் – 6 (மொத்தம்-860, நிறைவு பெற்றது - 830, நிலுவையில் உள்ளது - 30)
மண்டலம் – 7 (மொத்தம்-697, நிறைவு பெற்றது - 673, நிலுவையில் உள்ளது - 24)
மண்டலம் – 8 (மொத்தம் - 1075, நிறைவு பெற்றது - 1075)
M/s.உர்பேசர் (மண்டலம் 9 முதல் 15 வரை)
(மொத்தம் - 10094, நிறைவு பெற்றது - 4140, நிலுவையில் உள்ளது - 5954)

அறிவிப்பு 39

**பெருநகர சென்னை காவல்துறை மற்றும் பெருநகர சென்னை போக்குவரத்து காவல்துறையுடன் இணைந்து, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கைவிடப்பட்ட வாகனங்களை அப்புறப்படுத்தும் பணியும், மேலும், வாகன போக்குவரத்தினை மேம்படுத்த ஏதுவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட நாட்களாக சாலையோரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 1,308 வாகனங்கள் கண்டறியப்பட்டுள்ளது. கடந்த 01.09.2023 முதல் இவ்வாகனங்கள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுநாள் வரை 637 வாகனங்கள் அகற்றப்பட்டுள்ளது. இவற்றில், 316 வாகனங்களுக்கு உரிமையாளர்கள் உரிமைக்கோரி வந்ததால், அவர்களிடமிருந்து தகுந்த ஆவணங்களை பெற்று சரிபார்த்து, அவர்களிடமிருந்து இனிமேல் வாகனங்கள் சாலைகளில் நிறுத்தமாட்டோம் என்று உறுதி மொழி பெற்று அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள 321 வாகனங்களை ஏலம் விடுவதற்கு வாகனங்கள் எவ்விதமான குற்ற வழக்குகளில் சம்மந்தப் படவில்லை என்று சம்மந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளிடமிருந்து ஆட்சேபணை இன்மை சான்று (NOC) பெறுவதற்கு, பெருநகர காவல் துறைக்கு 30.10.2023 தேதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மண்டல அளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அறிவிப்பு 40

**காலிமனைகளில் குப்பைகள் / கட்டடக் கழிவுகள் கொட்டுவதால் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டு கொசு உற்பத்தி மற்றும் துர்நாற்றம் போன்ற காரணத்தால் அருகாமையில் உள்ள குடியிருப்பாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் வகையில் காலி மனை உரிமையாளர்களை பொறுப்பாக்கி அவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்காக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இதற்கான கொள்கை அளவிலான திட்டம் உருவாக்கி செயல்படுத்தப்படும்.**

காலி மனை உரிமையாளர்களை பொறுப்பாக்கி அவற்றை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்காக, நிலையான செயலாக்க திட்டம் (SOP) ஆணையரின் ஒப்புதல் பெற்று, அனைத்து மண்டலங்களுக்கும் 14.11.2023 அன்று சுற்றறிக்கை வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தந்த மண்டலங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு 41**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டுகளை மிகவும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் வைக்க போட்டியுணர்வை ஏற்படுத்தும் வகையில் வார்டுகளின் தூய்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளின் செயல்திறன் அடிப்படையில் வார்டுகளுக்கு தரவரிசை கட்டமைப்பை உருவாக்கி, அதனடிப்படையில் அனைத்து மண்டலங்களிலிருந்தும் மூன்று சிறந்த வார்டுகளுக்கு ஆண்டுதோறும், பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்டு வெகுமதிகள் வழங்கும் நடைமுறை ஏற்படுத்தப்படும்.**

வார்டுகளின் தூய்மை மற்றும் திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளின் செயல்திறன் அடிப்படையில் வார்டுகளுக்கு தரவரிசை கட்டமைப்பை உருவாக்க, கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர் அவர்கள் முன்னிலையில் சிறந்த வார்டுகளுக்கான சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்க, தரவரிசை பட்டியல் ஆய்வில் உள்ளது.

# இயந்திரப் பொறியியல் துறை

அறிவிப்பு **42**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திர பொறியியல் துறையால், தூய்மை பணி உள்ளிட்ட இதர துறைகளின் பயன்பாட்டிற்கென 3,045 வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது. இந்த வாகனங்களின் பயன்பாடு, பராமரிப்பு மற்றும் செயல்திறன் ஆகியவற்றினை இணையதளம் வாயிலாக கணினி மயமாக்கி Integrated Command and Control Centre (ICCC) சிறப்புற கண்காணித்து வாகன பராமரிப்பினை மேம்படுத்திட ஒருங்கிணைந்த வாகன பராமரிப்பு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படும்.**

வாகனங்களை பணிக்கு அனுப்பி வைப்பது (March Out) மற்றும் பழுது பற்றிய விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், வாகன தகுதி சான்று மற்றும் காப்பீடு புதுப்பித்தல் விவரங்களையும், இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

அறிவிப்பு **43**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் உள்ள மரங்களில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் பருவநிலை மாறுபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற பேரிடர் நிகழ்வுகளால் முறிந்து விழும் மரங்களை அகற்றிட தற்போது ஆறு எண்ணிக்கையிலான ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக மூன்று எண்ணிக்கையில் ரூ.88.50 இலட்சம் மதிப்பீட்டில் மரம் அறுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்படும்.**

கடந்த 16.10.2023 தேதியன்று பணியாணை வழங்கி பிப்ரவரி 2024ல் மூன்று மரம் அறுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் நபர் ஆய்வு மேற்கொண்டு, இயந்திரங்களின் தரம் குறித்து தொழில்நுட்ப தகுதி சான்று அலுவலர்கள் மூலம் உறுதி செய்யப்பட்ட பின், உபகரணங்கள் பணியில் ஈடுபடுத்தப்படும்.

அறிவிப்பு **44**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கடற்கரை மணற்பரப்பில் உள்ள குப்பைகள், நெகிழி கழிவுகள் மற்றும் உடைந்த கண்ணாடி துண்டுகள் ஆகியவற்றினை அகற்றி, கடற்கரையினை சுத்தம் செய்யும் பணிக்கென ஏற்கனவே 8 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும், மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், கூடுதலாக 2 எண்ணிக்கையில் டிராக்டர் மூலம் இயக்கப்படும் கடற்கரை மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் ரூ.1.88 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

டிராக்டர் மூலம் இயக்கப்படும் கடற்கரை மணலை சலித்து சுத்தப்படுத்தும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய, நிர்வாக அனுமதி பெறப்பட்டு மின்னணு ஒப்ப திறப்பு நாள் 26.10.2023 அன்று ஒப்பம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் எவரும் பங்கேற்காததால் ரத்து செய்யப்பட்டு மறு மின்னனு ஒப்பம் கோரப்பட்டு, ஒப்பம் திறக்கப்பட்டுள்ளது. தற்போது, விலைகுறைப்பு கோரி கோப்பு நடவடிக்கையில் உள்ளது. இந்நடவடிக்கை முடிந்தவுடன் இயந்திரங்கள் கொள்முதல் செய்து செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

அறிவிப்பு **45**

**தூய்மை பணிக்கென பயன்படுத்தப்படும் 289 எண்ணிக்கையிலான வாகனங்களின் செயல் திறனை GPS கருவியின் மூலம் கண்காணித்து அவற்றின் செயல் திறனை மேம்படுத்திட ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் GPS கருவிகள் 3 வருட காலத்திற்கு வாடகை ஒப்பந்த முறையில் பொருத்தி பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.**

GPS கருவிகள் 3 வருட காலத்திற்கு வாடகை ஒப்பந்த முறையில் பொருத்தி பராமரிக்கும் பணிக்கு, மின்னனு ஒப்பம் கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் எவரும் தகுதி பெறாததால் ஒப்பம் இரத்து செய்யப்பட்டது. இப்பணியினை, தகவல் தொழில்நுட்பம் மையம் மூலம் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. முதற்கட்ட கருத்து ஆலோசனைக் கூட்டம் 24.01.2024 அன்று நடைபெற்றுள்ளது.

அறிவிப்பு **46**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள சிறு ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றிடவும் மற்றும் சாலையோரங்களில் கொட்டப்பட்டுள்ள கட்டிட இடுபாடுகளை அகற்றிடவும், ஒவ்வொரு மண்டலத்திற்கு ஒரு வாகனம் வீதம் 15 எண்ணிக்கையில், காற்று மாசினை குறைத்திடும் வகையில், இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் டிப்பர் இணைந்த வகையில் சிறியவகை வாகனம் (CNG Operated Mini Truck with Tipper) ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்ட (SBM) நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படும்.**

காற்று மாசினை குறைத்திடும் வகையில், இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் டிப்பர் இணைந்த வகையில் சிறியவகை வாகனம் (CNG Operated Mini Truck with Tipper) கொள்முதல் செய்ய, நிர்வாக அனுமதி பெற்று, மின்னணு ஒப்பம் கோரப்பட்டுள்ளது. ஒப்பம் 26.02.2024 அன்று திறக்கப்படவுள்ளது.

அறிவிப்பு **47**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் அச்சகத்தில், அச்சகப்பணிகளை மேம்படுத்தி, துரிதமாகவும், உடனுக்குடனும் மேற்கொள்ள, High Speed Multi Function – Production Printer ஒரு எண்ணிக்கையில் ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து கொள்முதல் செய்யப்படும்.**

புதிய High Speed Multi Function – Production Printer ரூ.21,45,000/- செலவினத்தில் கொள்முதல் செய்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

## பேருந்து சாலைகள் துறை

அறிவிப்பு **48**

**(அ) சிங்கார சென்னை 2.0 நிதி - தமிழ்நாடு அரசின் நிதியான சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கும், சாலை, வடிகால், விளக்குகள், குளம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், 2023-2024-ஆம் நிதியாண்டில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், 452 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் 78.01 கிமீ நீளத்திற்கு ரூ.55.61 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளை மேம்படுத்துவதற்கும், சாலை, வடிகால், விளக்குகள், குளம் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், 2022-23 ஆண்டின், சிங்கார சென்னை 2.O திட்டத்தின் கீழ் ரூ.52.15 கோடி செலவில் 427 சாலைகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(ஆ) தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIF) நிதி - தமிழ்நாடு நகர்புறசாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.149.55 கோடி மதிப்பீட்டில் 251.11 கி.மீ நீளத்திற்கு 1,335 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புறச் சாலைகள் மறுசீரமைக்க 2022-23-ஆம் ஆண்டின், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின்(TURIF) கீழ் ரூ.134.63 கோடி செலவில்

1256 சாலைகள் முடிக்கப்பட்டன. மீதமுள்ள சாலைகளின் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

**(இ) நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) நிதி - தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள நகர்புற சாலைகள் மேம்பட்டு திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரில் 425.51 கிமீ நீளத்திற்கு 2,687 பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள் ரூ.327.63 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்புதிய சாலைத் திட்டத்தில், நடைபாதைகளில் ஆக்கிரமிப்பு மற்றும் வாகனங்களை நிறுத்துவதைத் தடுக்க, சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் கல் தூண் தடுப்புகள் அமைக்கப்படும்.**

பேருந்து வழித்தட சாலைகள் மற்றும் உட்புற சாலைகள் மேம்படுத்தும் பணிகள், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT) 2022-23-ஆம் நிதியாண்டில் ரூ.119.57 கோடி செலவில் 1099 முடிக்கப்பட்டன. மீதியுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

அறிவிப்பு **49**

**2023-2024-ஆம் நிதியாண்டில் 10,939 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளின் உடைந்த மற்றும் பொலிவிழந்த தெருப் பெயர்ப்பலகைகளை சீரமைக்கும் பணியினை குடியிருப்போர் நலச் சங்கம், நமக்கு நாமே திட்டம் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோரது பங்களிப்பின் மூலம் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளின் உடைந்த மற்றும் பொலிவிழந்த தெருப் பெயர்பலகைகளை சீரமைக்கும் பணி அனைத்து மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# மழைநீர் வடிகால் துறை

அறிவிப்பு **50**

**மண்டலம் – 1, 2, 3, 6 (பகுதி), 7 (பகுதி) மற்றும் 8 (பகுதி)யில் ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியுதவியுடன், கொசஸ்தலையாறு வடிநில பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 46 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.1,000 கோடியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்கள் துரிதமாக அமைக்கப்படும். இதனால், திருவொற்றியூர், மணலி, மாதவரம் அம்பத்தூர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் 30 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.**

கொசஸ்தலையாறு வடிநில பகுதிகளில், ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) நிதியில், திருவொற்றியூர், மணலி, மாதவரம் ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 769 கி.மீ. நீளத்தில், ரூ.3,220/- கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

2023-24-ஆம் ஆண்டில் ரூ.1000 கோடி செலவினத்தில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. 2023-24-ஆம் நிதியாண்டில் இதுவரை ரூ.720.35 கோடி செலவில் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், இதுவரை மொத்தம் 523 கி.மீ நீளத்தில் ரூ.2090 கோடி செலவில் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 68.07 சதவித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு **51**

**கோவளம் வடிநில பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணி KfW என்ற ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதி உதவியுடன் 360 கி.மீ நீளத்திற்க்கு ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. M1 திட்ட கூறுகளில், நங்கநல்லூர், புழுதிவாக்கம்,**

**பெருங்குடி, மடிப்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் 12 சிப்பங்களில் 159.33 கி.மீ நிளத்திற்கு ரூ.597.05 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக M2 திட்ட கூறுகளில், 11 சிப்பங்களில் 122.86 கி.மீ. நீளத்திற்கு ரூ.665.03 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தில் ஒப்புதல் பெற்று, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் 2023-2024-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

கோவளம் வடிநில பகுதியில், KfW ஜெர்மன் நாட்டு வங்கி நிதியில், ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி 360 கி.மீ. நீளத்தில், ரூ.1714 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. 2023-24.ஆம் ஆண்டில் ரூ.1000 கோடி செலவினத்தில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதில், முதற்கட்டமாக M1 & M2 திட்டத்தில், 3 சிப்பங்களில் 41.77 கி.மீ. நீளத்திற்கு, ரூ. 150.45 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் நடைபெறுகிறது. இந்த 3 சிப்பங்களில், இதுவரை 75 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன.

இரண்டாம் கட்டமாக, M1 & M2 திட்டத்தில், 9 சிப்பங்களில் 118.77 கி.மீ நீளத்தில் ரூ. 447 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் நடைபெறுகிறது. இந்த 9 சிப்பங்களில் இதுவரை 42 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன. 2023-24-ஆம் நிதியாண்டில் இதுவரை ரூ.195 கோடி செலவில் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

### அறிவிப்பு 52

**தமிழ்நாடு அரசின் 2023-2024-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட Core City பகுதிகளில் 2022-2023-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர்**

**வடிகால் அமைக்கப்பட்ட இடங்களை தவிர்த்து மற்ற இடங்களில் ரூ.232 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி 2023-2024-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

தமிழ்நாடு அரசின் மாநில பேரிடர் மேலாண்மை நிதியில் 42 சிப்பங்களில், 59.49 கி.மீ நீளத்திற்கு ரூ.232.35 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை, 81% பணிகள் முடிக்கப்பட்டு ரூ.70.16 கோடி ஒப்பந்ததாரருக்கு பணித்தொகை வழங்கப்பட்டது.

அறிவிப்பு **53**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களிலும் தூர்வாரும் பணி பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து ரூ.35 கோடியும் மற்றும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைப்பின் கீழ் கொசஸ்தலையாறு வடிநில பகுதிகளில், ஆசிய வளர்ச்சி வங்கி(ADB) திட்ட நிதியிலிருந்து ரூ.20 கோடி மதிப்பீட்டிலும், ஆகமொத்தம் ரூ.55 கோடி மதிப்பீட்டில் 2023-2024-ஆம் நிதியாண்டில் தொடர்ந்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மண்டலம் 1, 5, 7 மற்றும் 15-க்குட்பட்ட இடங்களில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிக்கு ரூ.27.55 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டது. மண்டலம்-6ல் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி, தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவுற்றது.

மண்டலம்-1,2,3 மற்றும் 6-க்குட்பட்ட கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் தூர்வாரும் பணி மற்றும் சிறு பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

## பூங்கா

அறிவிப்பு 54

**2023-2024-ஆம் நிதியாண்டிலும், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்கள், திறந்த வெளிகள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் 2.50 இலட்சம் மரக்கன்றுகளை தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் நடப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட இரண்டு இடங்களில் தமிழ்நாடு நகர்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், பண்ணை (Nursery) அமைத்து, அவ்விடங்களில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

2023-2024-ஆம் நிதியாண்டில் தன்னார்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் (அடுக்குமாடி குடியிருப்பு நலச்சங்கம் மூலமாக) ஆண்டுதோறும் 2.5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்பதற்கினங்க, 07.05.2021 முதல் 31.03.2023 வரை 2,63,742 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், 01.04.2023 முதல் 25.01.2024 வரையிலும் 40,225 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

அறிவிப்பு 55

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 2023-2024-ஆம் நிதியாண்டில் 584 பூங்காக்களை, குறைந்த செலவிலும், அதிக செயல்திறனுடனும், நல்ல நிலையில் பராமரிக்க, புதிதாக வடிவமைக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையின்படி (Standard Operating Procedure) ஒப்பந்ததாரர் மூலம் ரூ.48 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2023-2024-ஆம் நிதியாண்டில் 585 பூங்காக்களை நல்ல நிலையிலும், குறைந்த செலவிலும், அதிக செயல்திறனுடனும், பராமரிக்க, புதிதாக வடிவமைக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறையின்படி (Standard Operating Procedure) ஒப்பந்ததாரர் மூலம் ரூ.42.83 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர் வழியாக பராமரிக்க, பணி ஆணை வழங்கப்பட்டு பூங்காக்கள் அனைத்தும் ஒப்பந்ததாரர் மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**அறிவிப்பு 56**

**2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் 68 விளையாட்டு திடல்கள் மேம்படுத்தப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருகிறது. 2023-2024-ஆம் ஆண்டில், ரூ.500 இலட்சம் மதிப்பீட்டில் 25 விளையாட்டு திடல்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்படும்.**

2021-2022 மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டில் 49 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 விளையாட்டுத் திடல்களுக்கான பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 1 விளையாட்டுத்திடல் பணி கைவிடப்பட்டுள்ளது.

2023-2024-ஆம் ஆண்டிற்கு மண்டலம் 1 முதல் 15 வரையில் 19 இடங்களில் உள்ள விளையாட்டுத் திடல்கள் புதுப்பிக்கப்படும் பணிக்கு ரூ.5.00 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இதற்கு ஒப்பம் கோரப்பட்டு 12 பணிகளுக்கு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. 4 இடங்களுக்கான ஒப்பங்கள் பரிசீலனையில் உள்ளது. 3 பணிக்கு ஒப்பம் ஏற்புடையதாக இல்லாததால் ஒப்பங்கள் ரத்து செய்யப்பட்டு, மறுஒப்பம் கோரப்படவுள்ளது. கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

ட்டுள்ளது.

அறிவிப்பு **57**

**2023-2024-ஆம் நிதியாண்டில் 70 எண்ணிக்கையிலான சாலை மைய தடுப்புகளை அழகுப்படுத்தி, பராமரிக்க அரசு சாரா நிறுவனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பொது-தனியார் கூட்டு முறை (Public Private Partnership) மூலம், சாலை மைய தடுப்புகள், சாலை மைய தீவுத் திட்டு பூங்காக்கள் மற்றும் பூங்காக்களை தனியார் நிறுவனங்கள் மூலமாக பராமரிக்க திட்டமிடப் பட்டுள்ளது. இதன் காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பூங்காக்கள், சாலை மைய தடுப்புகள், சாலை மைய தீவுத்திட்டு ஆகியவற்றுக்கு ஆகும் செலவு குறைவதுடன் அதன் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.**

மின்துறை மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கலந்தாலோசகராக M/s.Kalinth Advisors Private Limited நிறுவனத்திற்கு 04.09.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது கலந்தாலோசகரால் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, மின் துறையினருக்கு மேல் நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்ப

# **கட்டடம்**

அறிவிப்பு **58**

**மண்டலம்-8, வார்டு-102, அண்ணாநகர் வேலங்காடு மயான பூமியில் சுமார் ரூ.1 கோடி மதிப்பீட்டில், பொது-தனியார் கூட்டு முறையில் (Public Private Partnership) முன்னோடி திட்டமாக உயிர் நீத்தோரின் உடல்களை பாதுகாக்கும் அறை உரிய கட்டமைப்புகளுடன் அமைக்கும் பணி 2023-2024-ஆம் நிதியாண்டில் துவங்கப்படும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கருத்துக்களின் (Feedback) அடிப்படையில் இத்திட்டம் அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் விரிவுப்படுத்தப்படும்.**

உயிர் நீத்தோரின் உடல்களை பாதுகாக்கும் அறை உரிய கட்டமைப்புகளுடன் அமைக்கும் பணிக்கு, ஒப்பம் கோரப்பட்டது. M/s.Flying squad Ambulance Service அவர்கள் தகுதி வாய்ந்தவராக கருதப்பட்டு, பணியாணை 01.09.2023 அன்று வழங்கப்பட்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மண்டல அலுவலர்-8 அவர்களால், இடம் தேர்வு செய்யப்பட்டு கட்டுமான பணி துவங்கப்பட்டு 100% பணி நிறைவடைந்து, 05.02.2024 அன்று மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களால் உயிர் நீத்தோரின் உடல்களை பாதுகாக்கும் அறை திறந்து வைக்கப்பட்டது.

அறிவிப்பு **59**

**2023-2024-ஆம் நிதியாண்டில் புதிய கட்டடங்களில், 11 மாநகர ஆரம்ப சுகாதார மையங்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.**

மூன்று மாநகர ஆரம்ப சுகாதார மையங்கள் 12.05.2023 அன்றும், ஐந்து மாநகர ஆரம்ப சுகாதார மையங்கள் 05.01.2024 அன்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் எட்டு இடங்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அறிவிப்பு **60**

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5-ல் சிந்தாதிரிப்பேட்டை பகுதியில், ரூ.269 இலட்சம் மதிப்பீட்டிலும், மண்டலம்-13-ல் பெசன்ட் நகர் பகுதியில், ரூ.80 இலட்சம் மதிப்பீட்டிலும், 2023-2024-ஆம் நிதியாண்டில் சிங்கார சென்னை – 2.0 திட்ட நிதி மற்றும் இதர நிதியின் வாயிலாகவும், நவீன மீன் அங்காடி அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

சிந்தாதிரிப்பேட்டை – நவீன மீன் அங்காடி அமைக்க பணியாணை 15.06.2023 அன்று வழங்கப்பட்டு. மீன் அங்காடிகளுக்கு இரும்பினாலான கூரை அமைப்பது, தரை அமைத்தல் மற்றும் கழிவறை பணிகள் (37% முடிக்கப்பட்டு) பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பெசன்ட் நகர் மீன் அங்காடி அமைக்க MLACDS நிதியில் ரூ.29.68 இலட்சம் மதிப்பீட்டிற்கு 27.06.2023 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்ட நிலையில், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் நிர்வாக அனுமதி 18.01.2024 அன்று ரத்து செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எலியட்ஸ் கடற்கரையில் மீன் அங்காடி அமைப்பதற்கு ரூ.83.09 இலட்சதிற்கு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரைக் கடிதம் 27.04.2023 அன்று பெறப்பட்டது பின்னர் கூடுதலாக ரூ.5.05 இலட்சத்திற்கு பரிந்துரைக் கடிதம் 22.01.2024 அன்று பெறப்பட்டது. தற்போது பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

அறிவிப்பு 61

**மண்டலம்–6-ல் பெரம்பூர் – புளியந்தோப்பு பகுதியில் உள்ள இறைச்சி கூடத்தினை நவீன முறையில் மேம்படுத்தி தமிழ் நாடு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பொது மக்களின் பயன்பாட்டிற்கு வெகுவிரைவில் கொண்டுவரப்படும்.**

இறைச்சி கூடத்தினை நவீன முறையில் மேம்படுத்துவது தொடர்பாக மண்டலம்-6 மூலமாக வடசென்னை வளர்ச்சி திட்டம் (II) 2024-2025 கீழ் சுமார் ரூ.60.00 கோடி தோராய மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த Consultancy Service நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அறிவிப்பு 62

**பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 35 எண்ணிக்கையிலான வணிக வளாகங்கள் மற்றும் 63 எண்ணிக்கையிலான சமுதாய நல கூடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இந்த வணிக வளாகங்கள் மற்றும் சமுதாய நல கூடங்களை சிறந்த முறையில் பராமரிக்க 2023-2024-ஆம் நிதியாண்டில் சுமார் ரூ.10 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

வணிக வளாகங்கள் மற்றும் சமுதாய நல கூடங்களை சிறந்த முறையில் பராமரிப்பது தொடர்பாக அனைத்து மண்டலங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிப்பு 63

**பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் மயான பூமிகளில் உள்ள காலி நிலங்களை பசுமையாக இருக்கும் வண்ணம் புல்வெளிகள், பூச்செடிகள் அமைத்தல் மற்றும் மயான பூமிகளின் வளாகங்களை அழகுப்படுத்திட ரூ.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.**

அறிவிப்பில் குறிப்பிட்டவாறு கீழ்கண்ட மயான பூமிகளின் வளாகங்களை அழகுபடுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது :

- வார்டு - 102 வேலங்காடு மயான பூமி
- வார்டு -110 நுங்கம்பாக்கம் மயான பூமி
- வார்டு - 120 கிருஷ்ணாம்பேட்டை மயான பூமி
- வார்டு - 141, கண்ணமாப்பேட்டை மயான பூமி
- வார்டு - 128, விருகம்பாக்கம் மயான பூமி.
- வார்டு - 174, பெசன்ட் நகர் மயான பூமி.

அறிவிப்பு **64**

**பெருநகர சென்னை மாநகராட்சியின், தலைமையிடத்திலுள்ள அலுவலர்கள் / பணியாளர்களின் குழந்தைகளை (Infant) பராமரிக்கும் வகையில் பகல்நேர காப்பகங்கள் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், தரமான உணவகம் ஏற்படுத்த ரூ.10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆரோக்கியம் மற்றும் புத்துணர்ச்சியுடன் பணியை மேற்கொள்ள உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு மற்றும் உள்விளையாட்டு (Indoor Games) கட்டமைப்பை ரூ.31 இலட்சம் மதிப்பீட்டிலும், வரும் ஆண்டில் சீரமைத்து தரப்படும்.**

உடற்பயிற்சி கூடத்திற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி நடைபெறுகிறது. பணியாளர்களின் குழந்தைகளை பராமரிக்கும் பகல்நேர காப்பகம் சீரமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

# நிலம் மற்றும் உடைமைத்துறை

அறிவிப்பு **65**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து, அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநகரத்திலிருந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் உள்ள 5,786 நிலங்களின் பட்டியல்கள் பெறப்பட்டுள்ளது. இந்நிலங்களின் அளவீடு மற்றும் எல்லைகளை நிர்ணயம் செய்து (Survey and Marking Boundary) ஆக்கிரமிப்புகள் ஏதும் இருப்பின், அவற்றை அகற்றி சுற்றிலும் வேலி அமைத்து பாதுகாக்கும் பொருட்டு தொழில் நுட்ப பிரிவுடன் (IT Cell) இணைந்து, தனியார் மூலமாக இப்பணியினை முதற்கட்டமாக பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார பகுதிகளில் 2023-2024-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். பொதுமக்களின் கருத்துக்களின் (Feedback) அடிப்படையில், தொடர்ந்து இதர வட்டாரங்களிலும் இப்பணி செயல்படுத்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து, அவற்றை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இப்பணிக்கான ஒப்பந்தத்தை M/s.Prime Meridian Surveys Pvt Ltd என்ற தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்த ஏற்புக் கடிதம் 14.12.2023 அன்று வழங்கப்பட்டு, மேற்படி பணிகள் துவங்கப்பட்டது.

## மின்சாரம்

அறிவிப்பு **66**

**2023-2024-ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள, கலந்தாலோசனை ஒலிபெருக்கி அமைப்பை அனலாக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் மாற்றியமைக்கப்பட்டு நவீனமயமாக்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி மன்றக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ள கலந்தாலோசனை ஒலிபெருக்கி அமைப்பை அனலாக் முறையிலிருந்து டிஜிட்டல் முறைக்கு மாற்றியமைக்க ரூ.3.43 கோடி மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி ஒப்புதல் பெறப்பட்டது. நிபுணத்துவம் பெற்ற ஆலோசகரை நியமிக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு, 10.01.2024 அன்று M/s. Karsha Thoughts Technologies Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆலோசகரின் விரிவான அறிக்கை பெறப்பட்டவுடன், பணிக்கான ஒப்பம் கோரப்படும்.

அறிவிப்பு **67**

**மெரினா கடற்கரை, அண்ணா நகர் டவர் பூங்கா, கூவம் ஆற்றுப்படுகை, அடையாறு ஆற்றுப்படுகை, BOV நிலையங்கள் மற்றும் லாரி நிலையங்களில் 2023-2024-ஆம் நிதியாண்டில் 105 எண்ணிக்கையில் CCTV கேமராக்கள் அமைக்கும் பணி ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

1. மெரினா கடற்கரையில் 13 எண்ணிக்கையிலான CCTV கேமராக்கள் அமைக்க ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டு ICCC பிரிவுடன் உடன் இணைக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

2. அண்ணா நகர் டவர் பூங்காவில் 87 எண்ணிக்கையிலான CCTV கேமராக்கள் அமைக்க ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் பணி ஆணை 21.06.2023 அன்று M/s.Biovision Secure Solution Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணி நடைபெறுகிறது. இப்பணி பிப்ரவரி 2024-க்குள் முடிக்கப்படும்.

3. கூவம் ஆற்றுப்படுகை மற்றும் அடையாறு ஆற்றுப்படுகையில் 75 எண்ணிக்கையிலான CCTV கேமராக்கள் அமைக்க ரூ.83.62 இலட்சம் மதிப்பீட்டில் பணி ஆணை 08.06.2023 அன்று M/s.Murugan Electrical Traders என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பணி நடைபெற்று வருகிறது. இப்பணி பிப்ரவரி 2024-க்குள் முடிக்கப்படும்.

4. BOV நிலையங்களில் CCTV கேமராக்கள் அமைக்கும் பணிக்கு துணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் அறிவுறுத்தலின்படி பணி கைவிடப்பட்டிருந்தது. ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி BOV நிலையங்களில் CCTV கேமரா அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

5. லாரி நிலையங்களில் 31 எண்ணிக்கையிலான CCTV கேமராக்கள் அமைக்க ரூ.5.38 இலட்சம் மதிப்பீட்டில் பணியாணை 08.06.2023 அன்று M/s. Kerala State Electronics Development Corporation Limited என்ற நிறுவனத்திற்கு வழங்கி, பணியை முடித்து, செயல்பாட்டை ICCC பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்ப மையம்

அறிவிப்பு **68**

**(i)** **“சொத்துவரி பெயர் மாற்றம் சான்று” பதிவிறக்கம் செய்து கொள்ள இணைய வழி வசதி அறிமுகப்படுத்தப்படும்.**

**(ii)** **பொதுமக்கள் நலன் கருதி, சொத்துவரி மேல்முறையீட்டினை இணையதளம் வழி நடைமுறைபடுத்த வழிவகை செய்யப்படும்.**

இணையதளம் வாயிலாக, சொத்துவரி பெயர் மாற்றம் மற்றும் சான்றிதழ் பதிவிறக்கம் செய்தல், சொத்துவரி மேல்முறையீடு செய்தல் ஆகிய வசதிகளுக்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு, 2023-ம் ஆண்டு, ஜூன் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பணி முடிவுற்று, பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

அறிவிப்பு **69**

**வயது முதிர்ந்தோர் தங்களது சொத்துவரியினை எவ்வித சிரமமுமின்றி செலுத்த ஏதுவாக இணையதளம், நம்ம சென்னை செயலி மற்றும் 1913 வாயிலாக முன்பதிவு முறை அறிமுகப்படுத்தப்படும். மேலும், இதன் மூலம் வருவாய் துறை அலுவலர்கள், முன்பதிவு செய்யப்பட்டோரின் இல்லம் சென்று நேரில் சொத்துவரி வசூலிக்கும் முறை 2023-2024-ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்படும்.**

வயது முதிர்ந்தோர் தங்களது சொத்து வரியினை எந்தவித சிரமமுமின்றி எளிதாக செலுத்த ஏதுவாக இணையதளம், நம்ம சென்னை செயலி மற்றும் 1913 வாயிலாக முன்பதிவு செய்யும் வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு **70**

**பொதுமக்கள், 2023-2024-ஆம் நிதியாண்டு முதல் சமூக நல கூடங்கள், வணிக வளாகங்களை பயன்படுத்திட, இணையவழி வாயிலாக முன்பதிவு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

சமூக நல கூடங்கள், வணிக வளாகங்களை பயன்படுத்திக் கொள்ள, இணையதளம் வாயிலாக முன்பதிவு மேற்கொள்வதற்குரிய, மென்பொருள் உருவாக்கம் செய்து (Payment Gateway integration) பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

அறிவிப்பு **71**

**2023-2024-ஆம் ஆண்டில், நகரமைப்பு பிரிவின் கட்டட அனுமதி மென்பொருளில், பொதுமக்கள் பதிவு செய்த விண்ணப்பத்தின் விவர தரவுகளை(DATA), வருவாய்த் துறை மென்பொருளுக்கு பரிமாற்றம் செய்து, வருவாய் அலுவலர்கள் சொத்துவரி மதிப்பீடுகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.**

நகரமைப்பு பிரிவின் கட்டட அனுமதி மென்பொருளில், பொதுமக்கள் பதிவு செய்த விண்ணப்பத்தின் விவரத் தரவுகளை (DATA), வருவாய்த் துறையின் பயன்பாட்டிற்காக செயல்படும் (Online portel) மென்பொருளுக்குப் பரிமாற்றம் செய்யும் பணி முடிவுற்றது. இம்முறையினால், வருவாய் அலுவலர்கள் சொத்துவரி மதிப்பீடுகளை விரைவாக மேற்கொள்ள முடிகிறது.

அறிவிப்பு **72**

**வரி வருவாய் மற்றும் புவியியல் தரவு தளத்தை எளிதாக்கும் பொருட்டு, 2023-2024-ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு மாநில புதுமை முயற்சிகள் திட்டத்தின் வாயிலாக(TANII) ரூ.8.28 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் புவியியல் தகவல் தொழில் நுட்பப்பிரிவில் புதிய தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமனம் செய்து வலுப்படுத்தப்படும்.**

தமிழ்நாடு மாநில புதுமை முயற்சிகள் (TANII) திட்டத்தின் வாயிலாக ரூ.8.28 கோடி செலவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் புவியியல் தகவல் தொழில் நுட்பப்பிரிவில், புதிய தொழில்நுட்பப் பணியாளர்கள் நியமனம் செய்ய 14.10.2022 தேதியில், இ-டெண்டர் வழியாக M/S Darashaw Company Private Limited 26.09.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. இதன்படி மூன்று ஆண்டுகளுக்கு, புதிய தொழில்நுட்பப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**அறிவிப்பு 73**

**ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம் 1913, முகநூல், டிவிட்டர், வாட்ஸ்-அப், இணையதளம், நம்ம சென்னை செயலி போன்ற தளங்கள் அனைத்தையும் ஒரே தளத்தில் இயக்குவதற்கு, பொதுமக்கள் ஈடுபாடு தளம் (Citizen Engagement Platform) 2023-2024-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படும். நம்ம சென்னை செயலி ஆண்ட்ராய்டு (Android) கைபேசியில் மட்டுமல்லாது, ஐ.ஓ.எஸ் (IOS) கைப்பேசியிலும் இயங்கும் வகையில் நவீன தொழில்நுட்பம் கொண்டு மேம்படுத்தப்படும்.**

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் மூலம், ஒருங்கிணைப்பு நடைமுறைப் படுத்தப்பட வேண்டி, தகவல் தொழில் நுட்ப மையத்தின் தகவல்கள் பெறப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் “இ-மென்பொருள் சோதனை, முடிவுறும் தருவாயில் உள்ளது.

# நமக்கு நாமே திட்டம்

அறிவிப்பு 74

**அண்ணா சாலையில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் Capital and Hope Foundation India என்ற நிறுவனத்தின் ரூ.3.13 கோடி பங்களிப்புடன் ரூ.6.26 கோடியில் மாதிரிப் பள்ளி கட்டடம் கட்டும் பணி 2023-2024-ஆம் ஆண்டில் நடைபெற உள்ளது. இம்மாதிரிப்பள்ளியில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியின் மாணாக்கர்களும் படிக்க உள்ளார்கள்.**

மண்டலம் 5-ன் கீழ்வரும் அண்ணா சாலை, அரசு மேல்நிலைப்பள்ளியில் Capital and Hope Foundation India என்ற நிறுவனத்தின் ரூ.3.13 கோடி பங்களிப்புடன் ரூ.6.26 கோடி மதிப்பீட்டில், மாதிரிப் பள்ளி கட்டடம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report - DPR) தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

Madrasa-E-Asam பள்ளியில் மாதிரி பள்ளிக்கான கட்டடம் கட்ட ஆலோசிக்கப்பட்டிருந்த நிலையில், நிர்வாக காரணங்களினால், இத்திட்டம் தற்போது, சைதப்பேட்டை அரசு புறம்போக்கு இடத்தில் மாதிரி பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு கல்வி துறையால் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு உரிய தடையில்லா சான்று வேண்டி சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 31.08.2023 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் ஏதும் பெறப்படாததால், 03.11.2023 மற்றும் 10.01.2024 அன்று மீண்டும் நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது

அறிவிப்பு 75

**சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ நிறுவனம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனையில், Incubator-ல் வைத்து பாதுகாக்கப்படும் குழந்தைகளின் தாய்மார்களை தங்க வைத்தும், அவர்களுக்கு உணவு கொடுப்பதற்காகவும் 100 படுக்கைகள்**

**மற்றும் உணவகத்துடன் கூடிய கட்டடம் கட்டும் பணி கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் நிறுவனத்தின் ரூ.1.20 கோடி பங்களிப்புடனும், தமிழக அரசின் பங்களிப்பாக நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.2.30 கோடியும், தேசிய நகர்புற வாழ்வாதாரப் பணி நிதியிலிருந்து ரூ.2.39 கோடியும், ஆகமொத்தம் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில் 2023-2024-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

மண்டலம் 5-ல் சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ நிறுவனம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனையில், Incubator-ல் வைத்து பாதுகாக்கப்படும் குழந்தைகளின் தாய்மார்களை தங்க வைத்தும், அவர்களுக்கு உணவு கொடுப்பதற்காகவும், 100 படுக்கைகள் மற்றும் உணவகத்துடன் கூடிய கட்டடம் கட்டும் பணி, கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் நிறுவனத்தின் ரூ.1.20 கோடி பங்களிப்புடனும், தமிழக அரசின் பங்களிப்பாக, நமக்கு நாமே திட்டத்தின் மூலம் ரூ.2.30 கோடியும், தேசிய நகர்புற வாழ்வாதாரப் பணி நிதியிலிருந்து ரூ.2.39 கோடியும், ஆகமொத்தம் ரூ.5.89 கோடி மதிப்பீட்டில், நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு **76**

**சென்னை கொரட்டூரில் சாவடி சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி, சாரதா நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் பாடியில் மூர்த்தி நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில், லெஜன்ட் சரவணா ஸ்டோர்ஸ்-ன் ரூ.1.50 கோடி பங்களிப்புடன் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் 2022-2023-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

மண்டலம் 7-ல் சென்னை கொரட்டூரில் சாவடி சாலையில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி, சாரதா நகரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் பாடியில் மூர்த்தி நகரில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில், லெஜன்ட் சரவணா ஸ்டோர்ஸ்-ன் ரூ.1.50 கோடி பங்களிப்புடன் ரூ.4.50 கோடி

மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளுக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மூன்று பள்ளிகளில் (கோட்டம்–83,84 மற்றும் 87) பணி நடைபெற்று வருகிறது.

அறிவிப்பு **77**

**சென்னை விருகம்பாக்கத்தில், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி, கொடுங்கையூரில் காமராஜர் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் கொளத்தூர் மடுமா நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் Repco Home Finance Ltd-ன் ரூ.1.01 கோடி பங்களிப்புடன், ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் 2023-2024-ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.**

மண்டலம் 10-ல் சென்னை விருகம்பாக்கத்தில், பள்ளி சாலையில் உள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி, மண்டலம் 4-ல் கொடுங்கையூரில் காமராஜர் சாலையில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் மண்டலம் 6-ல் கொளத்தூர் மடுமா நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் Repco Home Finance Ltd-ன் ரூ.1.01 கோடி பங்களிப்புடன், ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் மேம்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணி துவங்குவதற்கு, ஒப்பம் கோரப்படும் நிலையில் உள்ளது.

அறிவிப்பு **78**

**மண்டலம்-3, கோட்டம்-24-ல் புழலில் உள்ள நகர்புற குழந்தைகள் சுகாதார மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள், Punjab National Bank-ன் பங்களிப்புடன் ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் 2023-2024-ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

மண்டலம்-3, கோட்டம்-24-ல் புழலில் உள்ள நகர்புற குழந்தைகள் சுகாதார மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்கள், Punjab National Bank-ன் பங்களிப்புடன் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் 3 மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

# பொது

**அறிவிப்பு 79**

**மாண்புமிகு மேயர் அவர்களிடம் மண்டலம் 1 முதல் 15 வரையுள்ள பொது மக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகள் களையும் பொருட்டு, மாண்புமிகு மேயர் அவர்கள் மாதத்திற்கு ஒரு முறை, ஏதேனும் ஒரு வட்டார அலுவலகத்தில், மனுக்களை நேரடியாக பெறும் வகையில் "மக்களை தேடி மேயர்" திட்டம் 2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படும்.**

"மக்களைத் தேடி மேயர் திட்டம்" 03.05.2023 அன்று வடக்கு வட்டார அலுவலகம், மண்டலம்-5-ல் தொடங்கப்பட்டு, பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், 31.05.2023 அன்று மண்டலம்-6லும், 05.07.2023 அன்று மண்டலம்-13லும் 10.08.2023 அன்று மண்டலம்-1லும் மற்றும் 06.10.2023 மண்டலம்-7லும் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## வாகன நிறுத்தக் குழுமம்

அறிவிப்பு **80**

**(அ)** **2023 – 2024-ஆம் நிதியாண்டில் வாகன நிறுத்த நடைமுறை அமைப்பில் உள்ள சிக்கலை தீர்க்க, பெருநகர சென்னை மாநகராட்சியில் கீழ்கண்டுள்ளவாறு அலுவலர்கள் அடங்கிய ஒரு பிரத்யேகமான வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை குழுமம் என்ற பிரிவு ஏற்படுத்தப்படும். இக்குழு வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ளும்.**

**(ஆ)** **பெருநகர சென்னை மாநகராட்சியில் முக்கிய வணிகப் பகுதிகளில் உள்ள சாலை ஓரங்களில் வாகன நிறுத்த மேலாண்மையை, முன்னதாக தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் லிமிடெட் (TEXCO) மூலம் நிர்வகிக்கப்பட்டது. பின்னர் 2017-18-ஆம் ஆண்டில் வருவாய் பகிர்வு அடிப்படையில், பொது தனியார் கூட்டு முறையில், தெரு வாகன நிறுத்த மேலாண்மையை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, இதன் மூலம் தினசரி ரூ.5,000/-லிருந்து, கிட்டத்தட்ட ரூ.1.20 இலட்சமாக வருவாய் ஈட்டப்பட்டது. தற்போது தனியார் நிறுவனத்தால் 8, 9 & 10 ஆகிய மண்டலங்களில் சுமார் 5,000 வாகனங்கள் மேலாண்மை செய்யப்படுகிறது. வருவாயை மேலும் ஈட்டுவதற்கும், சாலை ஓரங்களில் வாகன நிறுத்த மேலாண்மையை, மேலும் மேம்படுத்தும் வகையில், 2023-2024-ஆம் நிதியாண்டில் மீதமுள்ள மண்டலங்களிலும் பொது தனியார் கூட்டு (PPP) முறையில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.**

தலைமை பொறியாளர் (திட்டமிடல்) அவர்களின் தலைமையில் வாகன நிறுத்தம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை குழுமம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட

பகுதியில், முந்தைய மின்னனு பரிவர்த்தனை (ECS) செயல்படுவதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டு இப்பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன. இப்பணிக்கான அடிப்படை ஆய்வு முடிந்ததும், மூன்று பகுதிகளுக்கும் தனித்தனியாக சலையோர வாகன நிறுத்தத்திற்கான ஒப்பம் கோரப்படும் நிலையில் உள்ளது.

## அறிவிப்பு 81


**2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் பதவி காலத்தில் மறைவெய்தும் மாமன்ற உறுப்பினர்களுக்கு மாமன்ற உறுப்பினர் குடும்ப பாதுகாப்பு நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சி 2023-2024-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பில், அறிவிப்பு எண்.82-னை நடைமுறைப்படுத்த, தீர்மான எண்.248/2023, நாள்.28.04.2023-ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது, இதனடிப்படையில் பதவிக் காலத்தில் மறைவெய்திய திரு.நாஞ்சில் வி.ஈஸ்வர பிரசாத், வார்டு-165 மற்றும் திருமதி.வா.ஷீபா, வார்டு எண்.122 ஆகிய இரண்டு மாமன்ற உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு, மாமன்ற உறுப்பினர் குடும்ப பாதுகாப்பு நிதியிலிருந்து, தலா ரூ.3.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.6.00 இலட்சம், தலைமைச் செயலகத்தில், கடந்த 19.05.2023 (வெள்ளிக்கிழமை) அன்று மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், அரசு முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் ஆளுங்கட்சித் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டார்கள் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அறிவிப்பு **82**

**2023 – 2024-ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பட்டு நிதியானது ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள மன்றத் தீர்மான எண்.402/2013, நாள்.26.06.2013-ல் குறிப்பிட்டுள்ள பணிகளை மாமன்ற உறுப்பினர்களின் மேம்பாட்டு நிதியில் பயன்படுத்தலாம் என 21.07.2023 சுற்றறிக்கையில் கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் / அனைத்து துறைத் தலைவர்கள் / மண்டல அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, வார்டு மேம்பட்டு நிதி ரூ.35.00 இலட்சத்திலிருந்து ரூ.40.00 இலட்சமாக உயர்த்தப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.



**G.C.C.P.P 463 / 2023-24 / 400 Bks of 27 Lvs / Feb- 2024**